Regd. M. No. 4565

தமிழ் மருத்துவப் பொழில்

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

திங்கள் வெளியீடு.

மலர் 3	ஆகஸ்டு 1943	இதழ் 8.

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press,
No. 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hide Park"
Poonamallee High Road, Kilpauk, Madras.

தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 3 | ஆகஸ்டு 1943 | இதழ் 8

ஒப்பு நோக்கு

துர்மாமிச வளர்ச்சியும் எப்பிஸ்கிளிரைட்டிசும்.

துர்மாமிசம்

வீங்கும் விதனம் சதைபோல வெளுத்தவிழி யதனிற் காணும்
வாங்கும் வளரும் சிலகாலம் வாதை மிகவாம் நீர்ப்பீளை
தேங்கும் நடக்க வொட்டாது சினத்து முகமும் கடுகுதென்று
தூங்கும் விழிக்கும் கிடைகோள்ளா துர்மா மிசமா மெனலாமே.

(பொ-ரை) வெள்ளை விழியில் (புண்ணிலுண்டாம்) துர்மாமிசம் போன்று சதை வளரும். சதை தோன்றி சிலகாலமிருந்து பிறகு மறையும். இவ்வாறு அடிக்கடி சதை தோன்றித்தோன்றி மறையும். (அதிக வலியினல்) மிக்க மனத்துயரும், துன்பமும் உண்டாம். நீர் வடியும். பீளைகட்டும். (இந்நோய் பெரும்பாலும் மேகசூலையினல் வருந்துபவர்களுக்கு உண்டாவதினல்) நடப்பதற்கு வருத்தமாய் இருப்பதுடன் திகைப்பும் உண்டாம் (அதிக வலியினல்) முந்தி (முகம்) சினத்துக் கடுப்படோடு படுத்து உறங்கக் கிடைகொள்ளாது விழித்துக்கொள்வர் எ-று. *அ. நயனவிதி*, (St–122)

EPISCLERITIS

Episcleritis presents itself as a circumscribed nodule, fixed firmly to the sclera and situated a short distance away from the limbus. It may be bluish in colour, from deep injection. The conjunctiva over it, is movable and is injected also.................................. It may be extremely painful, worse at night when it is, or almost free from pain. It is always absorbed eventually and never ulcerates........................It is prone to recur......................Apart from an occational history of rheumatism the cause of the disease is unknown.

Manual of Ophthalmic Practice by F.P Maynard (Page-112)

இரசம்

மாங்காடு—வடிவேலு முதலியார்.

உரிமை ஆசிரியர்க்கு உரியது

இரசத்தின் பேர்கள்.

காரமே சூதம் புண்யம் கர்பமாஞ் சாமஞ் சத்து
சூரிய விரோதி சாதி சூத்திரன் துள்ளி யீசன்
வீரியஞ் சூழ்ச்சி நீராம் விண்ணினீர் விண்மருந்து
சீர்பெறு மிரத மென்று செப்பினு ரொப்பில் லோரே.

சுக்கிலம் போக ஞானம் சுயப்புரு வண்டு நாசம்
இக்கியம் விசயம் வேத மூலஞ்சிந் தூரஞ் சிந்து
பக்கிரம் பதினெண் பந்தி பாரதங் கனலே பூதம்
நக்கனூர்க் குள்ள நாம நவிற்றலா மிரதப் பேரே.

என்று தசாங்க நிகண்டில் புகன்றிருப்பதால் இரசத்திற்கு,

1. காரம்; 2. சூதம்; 3. புண்யம்; 4 கற்பம்;5. சாபம்; 6. சத்து; 7. சூரியவிரோதி; 8. சாதி; 9. சூத்திரன்; 10. துள்ளி; 11. ஈசன்; 12. வீர்யம்; 13. சூழ்ச்சி; 14. நீர்; 15. விண்ணினீர்; 16. விண் மருந்து; 17. இரதம்; 18. சுக்கிலம்; 19. போகம்; 20. ஞானம்; 21. சுயம்புரு; 22. வண்டு; 23. நாகம்; 24. இக்கியம்; 25. விசயம்; 26. வேதம்; 27. மூலம்; 28. சிந்தூரம்;29. சிந்து; 30. பக்கிரம்; 31. பதினெண் பந்தி; 32. பாரதம்; ப்.33. கனல்; 34. பூதம்; 35. நக்கனூர்க்குள்ள பேர்கள்; என்னும் பேர்கள் இந்நூல் வழியாக உணர்கின்றோம்.

சட்டமுனி நிகண்டு.

இனிமை சிவசத்தி ஏற்றிய வர்ணத்தோன்
தனிமை சிவசத்தி சங்கரன் விந்துதான்
பனிமை பராபரம் பாய்ஞ்சிடு தூமமாம்
கனிமை சரக்கிற் கலந்திடு சிவனே.

சிவன் சிவன்றன் சிறந்திடு விந்துவாம்
காவன் சிதறிக் காணுவோன் முற்றும்
ஆவனற் கேசரி யாகிய வேந்தனும்
பாவனற் சூதம் பகர்ந்திடு நாமமே.

அந்தர கந்த னுதி வராட்டியன்
சுந்தரஞ் சொற்குறி தூம மகாமரம்
மந்தர மஞ்சி மாருத மகிபனும்
விந்தரஞ் சூதமாம் பரஷாணப் பேருமே.

சிலையான சூதமாம் சேர்ந்த கணவனும்
மலையாங் குறவனும் வாசுகி நாதன்றன்
கலையான கந்தன் காவக் குடியோனும்
நிலையான சூதாற் பாஷாணப் பேருமே.

1. இனிமை; 2. சிவசத்தி; 3. ஏற்றிய வர்ணத்தோன்; 4. தனிமை; 5. சங்கரன் விந்து; 6. பனிமை; 7. பராபரம்; 8. பாய்ஞ்சிடு தூமம்; 9. கனிமை; 10. சரக்கிற் கலந்திடு சிவன்; 11. சிவன்; 12. விந்து; 13. காவன்; 14. சிதறிக்காண்போன்; 15. கேசரி; 16. வேந்தன்; 17. பாவன்; 18. அந்தரகந்தன்; 19. ஆதி; 20. வராட்டியன்; 21. சுந்தரம்; 22. சொற்குறி; 23. தூமம்; 24. மகா மரம்; 25. மந்தரம்; 26. மஞ்சி; 27. மாருத மகிபன்; 28. விந்தரம்; 29. சிலை; 30. கணவன்; 31. மலைக்குறவன்; 32. வாசுகி நாதன்; 33. கந்தன்; 34. காவக்குடியோன் என்னும் பேர்கள் கூறப்பட்டிருக்கின்றன.

போகர் 7000 2ம் காண்டம்

இரசத்தின் 5 பிரிவுகள்.

1. இரசம், 2. இரசேந்திரம், 3. பாரதம், 4. சூதம், 5. மிசிரகம் என்பன.

1.	இரசம்	—	தளுக்குடன் கூடிய இரத்த நிறம்
2.	ரசேந்திரம்	—	பச்சை வர்ணம்
3.	பாரதம்	—	வெள்ளை நிறம்
4.	சூதம்	—	பொற்கு நிறம்
5.	மிசிரகம்	—	மயிற்கட்டி நிறம்.

சில நூல்களில் 1. சிவம், 2. விந்து, 3. வஞ்சகம், 4. மனவேகி, 5. கமலினி, 6. மஹாதேவபலம், 7. ஹரவீர்யம், 8. ரௌத்ராகாரம், 9. கந்தம், 10. சாறு எனவும் பேர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இரச உற்பத்தி

தாரகாசுர சம்மாரத்தின் பொருட்டுக் குமாரசுவாமியை உற்பத்தி செய்யவேண்டுமென்று, இந்திரன் முதலிய தேவர்கள் சிவபெருமானை வேண்டிக் குறையிரக்க, அதற்குச் சிவபெருமான் முருகரைத் தோற்றுவிக்க வேண்டிப் பார்வதியோடு ஒருவகையான திருவிளையாடல் காட்ட அதில் வீர்யம் உண்டாயிற்று.

அது பூமியிலிருக்கக் காரணம்

அவ் வீர்யத்தை அக்கினி க்ரகித்துத் தாங்க முடியாமல் பூமியில் விட்டு விட்டமையால் அது பூமியில் விழுந்து நான்கு திக்குகளிலும் பரவிற்று.

அப்படி பரவினதில் வடக்கு, தெற்கு, கிழக்குத் திசைகளில் பரவினது பார்வதியின் சாபத்தால் எச் செயல்களுக்கும் பயன் படாத தாயிற்று. மேற்குத் திசையில் சென்றது மாத்திரம் எல்லா வேலைகளுக்கும் பயன் படுவதாயிற்று.

இரசத்தைக் கொண்டுவரும் விதம்

முதல் ருதுவாகிற பெண் ஸ்நானஞ்செய்து அலங்காரஞ்செய்து கொண்டு குதிரையின்மேல் ஏறி ரச கூபத்திற்குச் சென்று கூபமத்தியிலிருக்கும் இரசத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே இரசம் மேலுக்குக்கிளம்பி, குதிரையை அதிவேகமாகச் செலுத்துகின்ற, அப்பெண்ணைப்பார்த்து ஒரு யோசனை தூரம் வரை பின் தொடர்ந்து வந்து மறுபடியும், அதிவேகமாக வந்த வழியே திரும்பி அக்கூபத்திற்குச் செல்லும். அப்போது அப்பெண்ணுக்குரியார் முன்னதாகவே அங்காங்குப் பூமியில் செய்து வைத்திருந்த பள்ளங்களில் விழுந்து தங்கின இரசத்தை எடுத்துக்கொள்வார்கள்.

அக்கினி தாங்க முடியாமல் விட்டு விட்ட இரசம் சில மலைப்பிரதேசங்களிற் சென்று அக்கினி தகித்தமையால் பூமியில் மண்ணில் மறைந்திருந்தது. அந்தத்தேசத்தவர்கள் அம்மண்ணை எடுத்து இரசம் எடுக்கும் பொறியிலிட்டு அதிலிருக்கும் இரசத்தை எடுப்பார்கள். இவை இரசம் எடுக்கும் விதங்களாம்.

இரசப்பிரிவு

1. வகை. வெள்ளை பிராமணசாதி, 2. வகை. சிவப்பு க்ஷத்திரியசாதி, 3. வகை. பச்சை வைசிய சாதி, 4. வகை. கறுப்பு சூத்திரசாதி எனப்படும்.

இரசத்தைச்செய்யும் விதம்

பிராமணசாதி கற்ப விஷயத்திற்கும், க்ஷத்திரியசாதி குளிகை செய்வதற்கும், வைஸ்யசாதி தாது வாதத்திற்கும், சூத்திரசாதி இதர தொழில் செய்வதற்கும் உதவும்.

உள்ளே நீல நிறமுள்ள இரசம் மிக வன்மை யுள்ளது. மத்தியில் அக்கினி, சூரியனைப்போன்ற காந்தி, தாம்பிர நிறம், சித்திர வர்ணம் இவை யிருக்கும் இரசம் எல்லா மருந்துகளுக்கு மாகும்.

இரச மகாத்மியம்

உலர்ந்த கட்டையின் சமூகத்தை அக்கினி தகித்து விடுவது போல ஏழு தாது தோஷமுள்ள இரசம் தகிக்கச்செய்யும். இரசத்தில் 13 தோஷம் உண்டு. இன்னும் இரசத்தைப் பார்ப்பதில் பிரமஹத்தியால் வந்த தோஷங்கள் சந்தேகமின்றி நீங்கும். அதை உப

யோகித்தால் ஸ்வர்க்காதி பதவிகள் உண்டாகும். தோஷமில்லாத இரசம் பிரம சொரூபமென்றும், மூர்ச்சமிருக்கும் இரசம் விஷ்ணு ரூபமென்றும், பஸ்பித்த இரசம் ருத்திர சொரூபமென்றும், கட்டின இரசம் மகேஸ்வர ரூபமென்றும், தேஹ லோகங்களால் பேதிக்கப் பட்ட இரசம் சதாசிவ ஸ்வரூபமென்றும் தெரிந்து கொள்ளவேண்டும்.

இரச காட்சிப்பலன்

இரசத்தைப் பார்ப்பதால் நூறு அஸ்வமேதயாக பலத்தையும் கோடி கோதான பலம், கங்கையாதி சர்வ தீர்த்த ஸ்நானம், சகஸ்ர சொர்ணதானம் இவைகளால் கிடைக்கக்கூடிய புண்ணியமாகிய இவை கள் உண்டாகும்.

மண் லிங்கத்தைப்பார்க்கிலும், ஸ்வர்ணலிங்கம் கோடி குணுதிக் யம், அதைவிட ரத்தினலிங்கம், அதைவிட பாணலிங்கம், அதைவிட இரசலிங்கம், இதைவிட உயர்ந்தது நாம் கண்டதுமில்லை; கேட்டது மில்லை.

இரசத்தின் பேர்கள்

அந்தக்கூபத்திலிருந்துண்டாகும் சிவவீர்யம், இரசம், இர சேந்த்ரம், சூதம், பாரதம், மிஸ்ரிகம் என்னும் ஐவகையாயிருக்கும். அன்றிப்பாரதி, ருத்ரரேதஸ், தாது, மஹா ரசம், ரசேந்திரம், சபலம் சூதம், ரசலோஹம், ரசோத்தமம், சூதராஜம், ஜைத்ரம், சிவபீஜம், சிவம், அம்ருதம், லோகேசம், தூர்த்தகம், ப்ரபு, ருத்ரஜம், ஹரதேஜம், அஸிந்த்யம், அதம், கேசரம், அமரம், தேஹதம், ம்ருத்யு, ஸாகஸம், ஸ்கந்தம், ஸ்கந்தாம்சம், தேவம், திவ்யரசம், ரசாயனஸ்ரேஷ்டம், யசதம், வநம் என்பவைகளாம். இவை ஒரு சாரார் கொண்ட மதம்

இரச நிந்தைத்தோஷம்

இரசத்தை நிந்தித்த பாவி ப்ரம்ம ஞான முள்ளவனுனுலும் நூறுகோடி ஜன்மம் வரைக்கும் கோர நரகத்திலிருந்து பிறகும், அவன் ரஸாஸாபம், ரஸாஸ்பர்சம் இவைகளைச் செய்தவன் அநுப விக்கும் ஆயிரம் பிறவி வரைக்கும் துக்க முள்ளவனுவன்.

எண்வகை ரசதோஷம்

1. உண்டனம், 2. கௌடில்யம், 3. அநவர்த்தம், 4. சங்கரம், 5. ஷண்டத்வம், 6. பங்கு காரத்வம், 7. பளுவால் சமலத்வம், 8. சவிஷத்வம் என்பன. (தொடரும்)

கருவங்கம்

Dr. R. தியாகராஜன், L.I.M.

ஈயம், காரீயம், கருநாகம், சீசம் என்று பல வேறு பெயர்களினால் வழங்கப்படுகின்ற கருவங்கம் இருவகையாகக் கிடைக்கின்றது. யாதொரு காரணத்தினாலும் சலன முறாத வங்க மலைகளிலுள்ள சில பாகங்களில் செண்டு செண்டாகவும், சில பாகங்களில் குழிப்புள்ள இடங்களிலும், சில பாகங்களில் குறுக்கு நெடுக்காக யாதொரு ஒழுங்கு மின்றி யோடுகின்ற இரேகைகளிலும் இருக்கக் காணலாம். அன்றியும், இம்மலைகளிலிருந்து வரும் அருவிகளில் அணு வணுவாய் மணலுடனும் சிறு கற்களுடனும் கலப்புற்றுக் கிடப்பது ஒரு வகை

மற்றொரு வகையாகக் கிடப்பது செம்பு, இரும்பு, பாஷாணாதி யுப்புகளுடன் கலந்திருப்பது. இஃது முன் வகையினும் தாழ்ந்த தே யாயினும் சுத்தித்து உபயோகிக்கலாம்.

மற்றும் காரீயம் சிறிய வளவில் பல தாவரப் பொருள்களிலும் இருக்கின்ற தென்பதைக் கீழ்ச்செய்யுள் உணர்த்தும்.

> " சிதைமுத்தி ருக்கஞ் செவிவெள்ளைச் சார்வேளை
> பாதுகைவே லிப்பருத்தி முஷ்டை—கோதில்சுரை
> சிந்தில் விழுதி சிறுபீளை வெள்ளறுகும்
> எந்திழை யீரீய மூலி."

உலோகச்சத்துக்கள் சிறிய வளவில் தாவரப் பொருள்களி லிருப்பதினால் நம் முன்னோர்கள் நோய் ஆரம்ப காலத்தில் தாவரப் பொருள்களைக்கொண்டு சிகிச்சை செய்து அதற்கு வசப்படாவிடில் பிறகு உலோகத்தை நேரடியாக உபயோகித்துக் குணம் கண்டனர். இதனைக் கீழ்க்கண்ட வடியால் நன்குணரலாம், இதை "வேர்பாரு தழை பாரு மிஞ்சினக்கால் மெல்ல மெல்லப் பற்ப செந்தூரம் பாரே." என்பதால் அறிக.

நிற்க, கருவங்கத்தினுடைய பகைச் சரக்குகள் அப்பிரகம், அண் டம், அயம், கல்லுப்பு, கந்தி, காந்தம், கிளிஞ்சல், கௌரி, நண்டு, நத்தை, நிமிளை, வெடியுப்பு, கல்நார், சாத்திரபேதி என்றும், நட்புச் சரக்குகள் சூதம், நாகச்செம்பு, பூநாகம், மயூரச்செம்பு, வெள்ளி, வெள்வங்கம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கைப்புச் சுவையை உடைய கருவங்கத்துக்கு வீரியம் வெப்ப மும், விபாகம் கார்ப்புமாகும். இது வெப்பமுண்டாக்கிச் செய்கை யையும், பசித்தீத் தூண்டிச் செய்கையையும், கிருமி நாசனிச்செய் கையையும், துவர்ப்பிச் செய்கையையும், மூத்திர விர்த்தினிச் செய் கையையும் உடையது. கருவங்கம் நீர்க்கூற்றின்பால் சேர்ந்தது. இதன் பொதுக் குணத்தைக் கீழ்க்கண்ட செய்யுள்களால் உணர்க.

பன்மரநஞ் சக்கிரோய் பாகர்த்தபி விரணங்
குன்மங்கால் சூலங் குதவிரணஞ்—சன்மப்
பெருநாக மேகப் பிணிசுரமி வற்றைக்
கருநாக மேநீக்குங் காண்.

(பொ-ள்) ஆற்றலரி முதலிய தாவரங்களினால் உண்டாம் விடம், கண்ணோய்கள், கர்த்தபி நோய், குன்மம், வாத நோய், சூலை, பகந்தர விரணம், யானைக்குட்டம் (கஜ சரும குட்டம்) மேகப்பிணி, சுரமிவை களைக் கருநாகம் நீக்கு மென்ப.

மற்றும்,

ஆகத்தி லுண்டான வத்திசுரம் பித்தசுரம்
போகப்பசி மூளப் பூதலத்தில்—வாகைபெறுஞ்
சங்கத்தை நேராகச் சாற்றுமுறை பண்டிதர்கள்
வங்கத்தை நீறுக்கு வார்.

(பொ-ள்) கருவங்கம் எலும்பைப்பற்றிய சுரம், பித்தசுரம் இவற்றை நீக்கி அதி பசியை உண்டு பண்ணு மென்பதாம்.

மற்றும்,

சொன்னதோர் காரியக் குணத்தைக் கேளாய்
சுத்தப்பிர மேகத்தைப் போக்குவிக்கும்
....
சொன்னதோர் பெருவயிறு வுப்புசங்கள்
பேரான பாண்டோடு விரணம் போக்கும்
நின்னதோர் நேத்திரத்தின் வியாதி யெல்லாம்
நீக்கிவிடும்................"

(பொ-ள்) காரீயம், பிரமேகம், பெருவயிறு, உப்புசம், பாண்டு, விரணம், நேத்திரப்பிணி முதலியவற்றை நீக்கு மென்பதாம்.

நிற்க, மேகக் கிரந்திக்குச் சிறப்பு மருந்து இரசமென்றாலும் இரச முபயோகிக்குமுன் வங்கத்தை உபயோகிக்க வேண்டு மென்பதைக் கீழ்க்கண்ட வடியால் உய்த்துணர்க.

"காரீயத்தினால் வெல்லவரிய மேகக்கிரந்தியை—ரசத்தினால் [வெல்லுங்
காரியத்தினை லோகநாயகன் காட்டலெனவே"

நிற்க, "வங்கம் கெட்டால் பங்கம்" என்று ஒரு பழமொழி யிருத்தலின் வங்கத்தை நன் முறையில் சுத்தித்து மருந்தாக்கி உபயோகிக்க வேண்டும். தவறின் தீங்கை விளைவிக்கும்.

வங்கத்தின் சுத்தி முறைகள்

ஒரு பலம் வங்கப்பொடிக்கு ஆறு பலம் ஐவேலிச் சமூலச்சாறு விட்டு அன்று முழுதும் வெய்யிலில் வைத்து மறு நாளும் முன் போலவே செய்து இப்படி பத்து நாள் வரைக்கும் பண்ணி, இரண்டு நாள் சாறு விடாது உலர்த்தி, மறுபடியும் ஒரு முறை செய்து, பிறகு ஒரு பானைக்குள் மேற்படி வங்கத்தைப் போட்டு அதில் மேற்படி சாறு ஒரு மரக்கால் விட்டு வாய்ப் பொருத்த முள்ள பாண்டத்தால் மூடிச் சீலை செய்து பூமியில் குழிதோண்டி யதற்குளிட்டு சாம்ப லெருவால் மூடி இருபது நாள் கழிந்த பிறகு எடுக்கப் பூமியினின்று எழும் ஆவியால் வங்கம் ஒருவித சிறந்த குணத்தை யடைந்து சுத்தியாம். இப்படியாகச் சுத்தித்த வங்கம், பற்பம், செந்தூரம், மாத் திரை முதலியன செய்வதற்கும் வாத வேலைக்கும் ஆம் என்ப. இச் சுத்தி வெள் வங்கத்திற்குக் கூறியபோதிலும், கருவங்கத்திற்கும் நன் றாய்ப் பொருந்தும். இதனை, "காரீயத்தினை மாரச சுத்திபோலே நீறப்படியே காணீர்." என்பதால் அறிக.

வேறு

ஒரு பாண்டத்தில் வெள்ளாட்டு நீர் விட்டு அதில் பிரண்டை வேர்க்கல்கத்தை யிட்டுக்கலந்து நல்லெண்ணெயைச் சேர்த்து வங்கத் தை உருக்கிச் சாய்த்து ஆரவிட்டுக்கழுவி யெடுக்கச் சுத்தியாம்.

வேறு

நொச்சிச் சாற்றில் மஞ்சள் பொடியைக் கலந்து வைத்துக் கொண்டு அதில் வங்கத்தை உருக்கிச் சாய்க்கவும், மேலும் இப்படி இருமுறை செய்யச் சுத்தியாம்.

வங்கப்பொடியை நொச்சிச் சாற்றிலிட்டு வெய்யிலில் வைத்தா லும் சுத்தியாம்.

வேறு

"இந்துருணிப்பீ இழுக்கு மீயநீர்" என்ற அடியால் பெருச் சாளி மலத்தினால் ஈயத்தின் நீரைவாங்கி விடலாமென்று அறியக் கிடக்கின்றது. விபரம் வல்லோர் வாய்க்கேட்டுணர்க.

வங்க பற்பம்

ஒரு பலம் சுத்தித்த வங்கப்பொடிக்குக் கீழ்ப்பட்டியில் குறிப் பிட்ட சாறுகளைக்கொண்டு முறைப்படி அரைத்து, உலர்த்திப் புட மிட்டெடுக்க, நீர் குடிக்க வந்த வெண்மேகத்தை யொத்த நிறத்தை அடையும்.

சாற்றின் பெயர்	அளவு பலம்	அரைப்பு நாள்	உலர்த்தும் நாள் வில்லை	கவசம்	புடம் வரட்டி
பசளை யிலைச்சாறு	6	6	5	1	45
ஆகாசத்தாமரைச்சாறு	5	5	4	1	36
வன்னியிலைச்சாறு	4	4	3	1	26
பசு மஞ்சள் சாறு	3	3	2	1	18
செப்பு நெருஞ்சில் சமூலசாறு	2	2	1	1	16
கருணை யிலைச்சாறு	1	1	1	1	9

இப்படியாக முடிந்த வங்க பற்பத்தின் அளவு யாதெனில், துவரையின் கால் கூறு உத்தமம், அரைக்கூறு மத்திமம், முக்கால் கூறு அதமம், முழுக்கூறு அதமாதமமென்று கூறப்பட்டுள்ளது.

துணைமருந்தும் தீருபி நோய்களும்

சிரவலியாற் டாறு சிகாவளமா வென்றார்
சிரவலியாற் பாறுளோகா றீவச்—சிரவலியாற்
கானமழை மானமுது கன்னியறல் வன்னியறல்
கானமழை பானமிவை கள்.

(சொ-ரை) * சிரவல்-கவுதாரி, இ-சு, ஆல்-தூரிஞ்சில், பாறு-பருந்து, சிகாவளம்-மயில், மா-வண்டு, (இவைகள் பறக்கும்போதுண்டாம் ஒலி, பதைப்பு, துடிப்புகளை) என்று ஆர்-(முறையே) எப்போதும் பொருந்திய, சிரவலி-தலைநோய், ஆல்-நடுக்குவாதம், பாறு-விடவாயு, உளை-சிணுக்கு வாதம், கால்-படர்வாதம், தீ-திணறுவாதம், (என்னும் இவைகட்கு முறையே) வச்சிரவல்லியால்-பிரண்டைச்சாற்றிலும், கான மழை-துளசிச் சாற்றிலும், மான் அமுது-முலைப்பாலிலும், கன்னி அறல்-கற்றாழைச் சோற்றுச் சாற்றிலும், வன்னி அறல்-வெந்நீரிலும், கான மழை-தேனிலும் கொடுப்பதற்கே, இவைகள் - -, பானம்-அநுபானங்களாம்; எ - று.

(வி-ரை): கவுதாரிப்பட்சி பறப்பதைப்போல் சத்தமும், பதைப்பும், துடிப்பும் தலையில் உண்டாய் வலியும் இரைச்சலும் உண்டாகிற சிணுக்கு வாதத்திற்கும் அதைச்சேர்ந்த பாண்டுவை, முறை சுளிர்க் காங்கை, வெள்ளோக்காளம் போன்ற பிணிகளுக்கு அநுபானம் பிரண்டைச்சாறு.

ஈ எப்படி பறந்து அசையுமோ அப்படி ஒருவித சத்தமும், அசைவும், திடுக்கிடலும் கன்னத்தில் உண்டாகி உடம்பை நடுக்கச் செய்கின்ற நடுக்கு வாதம், அதைச்சேர்ந்த திமிர்வாதம், பனிமந்தத்தினால் உண்டாம் வெட்டம், மயிர்க்கூச்சத்துடன் கூடிய சுளிர் இவைகளுக்குத் துளசிச்சாறு.

(தொடரும்)

தாது கட்ட

நீர்முள்ளி விதையை இரண்டு தம்பிடி எடை நிறுத்து இரசதாளி வாழைப்பழத்தைத் தோல் உரித்து அதனுடன் சேர்த்துப் பிசைந்து இரவில் பனியில் வைத்து மறுநாள் காலையில் உண்ணவும். இங்ஙனம் ஏழுநாள் செய்ய விந்து கட்டும்.

கைகால் எரிவுதீர

குப்பைமேனி யிலையை வெயிலிலே காயவைத்து எடுத்துச் சூரணம் வராகனெடை பத்து, கருஞ்சீரகச் சூரணம் வராகனெடை பத்து, இவைகளை ஒன்று சேர்த்து, சர்க்கரை வராகனெடை பத்தும் சேர்த்து நன்றாய் கலந்து, கால் வராகனெடை வீதம் தேனில் கலந்து தினம் இருவேளை யுண்ண கைகாலெரிவு, உடலெரிவு நீங்கும்.

விக்கல் தீர

பால் சாம்பிராணியைக் கல்வத்திலிட்டு பொடி செய்து, கரும்பு இரசம் சமனிட்டு மெழுகுபோலரைத்து எடுத்துக்கொண்டு பணவெடை நுனிநாக்கில் தடவ விக்கல் போம்.

அரையாப்பு நீங்க

சிற்றாமணக்குப் பருப்பு ஒரு பங்கு, மூக்கு நீக்கிய சேங்கொட்டை ஒரு பங்கு, மஞ்சள் ஒரு பங்கு இவைகளை யிடித்து தாய்ப்பால் விட்டரைத்து சிற்றாமணக்கு நெய்யில் குழைத்துச் சீலையில் தடவி அரையாப்புக் கட்டிகள் மீது போட குணமாகும்.

அண்ட வீக்கத்திற்குப் பற்று

சுக்கைச் சூரணஞ்செய்து எலுமிச்சம் பழச்சாற்றால் மெழுகு போல் அரைத்து அண்ட வீக்கத்திற்குப்பூசி அனல் காட்ட, வீக்கமும் வலியும் வற்றி வாடும். மற்றும் ஒருமுறை செய்ய நன்று,

அண்ட வீக்கத்திற்குப் புகை

புங்கம் விதை, கழற்சிப்பருப்பு, சேங்கொட்டை (மூக்கு நீக்கப்பட்டது) இவைகளைச் சமன் எடுத்து இடித்துப் பொடித்து எடுத்துக்கொள்ளவும். பிறகு ஒரு சட்டியில் புளியம் புரணியைப் போட்டு கொஞ்சம் நெருப்பிட்டு மேற்படி பொடியை தூவவும். அப்பொழுது அதினின்று புகை வீசும். இதை வீங்கிய அண்டத்தின்மேல் படும்படிச் செய்ய வீக்கமும் வலியும் நீங்கும் மூன்று நாள் இங்ஙனமே செய்யவும்.

கிருமிகள் விழ

முற்றின புரசம் பருப்பு, பேய் பீர்க்கம் பருப்பு, பிரண்டை (கணு நீக்கினது) ஓமம் இவைகளைத் தனித்தனி ஒரு வராகன் தூக்கி உழக்கு நீர்விட்டு எட்டில் ஒன்றாய்ச் சுறுக்கி இரவில் கொடுத்து, மறு நாள் காலையில் சிற்றாமணக்கு நெய் தக்களவு கொடுக்கப் பேதியாகும். அதில் கிருமிகள் கூடு கூடாக விழும்.